
# அறநெறி அமுதம்

ஆன்மீக விழுமியக் காலாண்டிதழ் – 63

ஐப்பசி – மார்கழி 2016



அமுதம் 16

துளி 4

இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை, கொழும்பு – 06

# அழுக்காறு

காலங்காலமாக நாம் பயங்கரமான பொறாமையால் நீர்த்துப் போயிருக்கிறோம். எப்போதும் மற்றவர்கள் மீது பொறாமைப்பட்டபடியே இருக்கிறோம். “இந்த மனிதனுக்கு என்ன அதிக முக்கியத்துவம்? எனக்கு ஏன் இல்லை?'' என்றே எப்போதும் நினைக்கிறோம். கடவுளே! பொறாமைப்படாமலிருக்க நாம் எப்போதுதான் கற்றுக்கொள்ளப் போகிறோமோ!!

பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும். வேறு எந்தச் சக்தியாலும் அவற்றைத் தடுத்து நிறுத்த முடியாது. ஒருமுறை நீ அவற்றை இயங்கும்படி செய்துவிட்டால் அதனால் வரும் விளைவையும் நீ ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். இதை நீ நினைவில் வைத்துக்கொண்டால் தீய செயல்களைச் செய்வதிலிருந்து அது உன்னைத் தடுத்து நிறுத்தும்.


அடிமைகளின் குணமாகிய பொறாமைதான் நமது நாட்டின் அழிவுக்கே காரணமாக அமைந்திருக்கிறது. ஒரு நண்பன் மற்றொருவரைத் தனிமையில் தூற்றுவதை ஒருபோதும் கேட்டுக்கொண்டிருக்காதீர்கள்.



எப்போதும் பொறாமையை விலக்குங்கள். இதுவரை நீங்கள் செய்யாத மகத்தான காரியங்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள். பிறருக்காகக் கூடி உழைக்கக் கற்றுக்கொள். முதலில் நாம் வழிபட வேண்டிய தெய்வங்கள் எமது தேச மக்களே ஆவர். ஒருவரிடம் ஒருவர் பொறாமை கொண்டு ஒருவரோடு ஒருவர் சண்டையிடுவதற்குப் பதிலாக ஒருவரை ஒருவர் நாம் பூஜிப்போமாக.


தொகுப்பு: சி. அபிராமி, பழைய மாணவி (தொண்டராசிரியை)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

# பிரார்த்தனை



சரணாகத தீனார்த்த பரித்ராண பராயணே |
ஸர்வஸ்யார்த்திஹரே தேவி நாராயணி நமோஸ்து தே ||

*-தேவி மஹாத்மியம்*

**பொருள்:** தன்னைச் சரணடைந்த தீனர்களையும் துன்புற்றோரையும் காப்பாற்றுவதையே தொழிலாகக் கொண்டவளே! எல்லோருடைய துன்பத்தையும் துடைப்பவளே! நாராயணி தேவியே! உனக்கு நமஸ்காரம்.

தாயுநீயே தந்தைநீயே சங்கரனே அடியேன்
ஆயுநின்பால் அன்புசெய்வான் ஆதரிக்கின் றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னு ளைவர்நின்(று)ஒன் றலொட்டார்
மாயமேயென் றஞ்சுகின்றேன் வலிவல மேயவனே.

*- சம்பந்தர்*

**பொருள்:** சங்கரனே! பிரியத்தைச் செய்யும் தாயும் நீயே. நன்மையை நாடிச் செய்யும் தந்தையும் நீயே. உயிர்கட்கு நன்மை செய்வதையே இயல்பாகக் கொண்டு, அதனால் சங்கரன் என்ற காரணப் பெயரைப் பெற்றாயோ?

**இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.**
**40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06.**

**அமுதம் 16** **துளி 4**

## இந்த இதழில்...


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிரார்த்தனை | 01 |
| 2. | இதழாசிரியர்களிடமிருந்து | 03 |
| 3. | ஆசைப்பட்ட பிராமணன் - பஞ்சதந்திரக் கதை | 05 |
| 4. | தீபத் திருநாளிலே - கவிதை | 08 |
| 5. | ஜீவகாருண்யம் - உண்மைச் சம்பவம் | 09 |
| 6. | பிருஹதாரண்யக உபநிடதம் | 11 |
| 7. | படக்கதை | 14 |
| 8. | குறுக்கெழுத்துப் போட்டி | 16 |
| 9. | புண்ணிய நதிகள் | 17 |
| 10. | யோகம் | 22 |
| 11. | கடந்த இதழின் குறுக்கெழுத்துப் போட்டி விடைகள் | 24 |
| 12. | கேட்டுச் சுவைத்தவை | 25 |
| 13. | பாப்பா பாப்பா கதை கேளு | 26 |
| 14. | கலியுக கற்பகதரு | 28 |
| 15. | தன்னம்பிக்கை ஏன்? - படித்துச் சுவைத்தவை | 31 |
| 16. | சாதனையாளர் | 33 |
| 17. | செய்திகள் | 35 |


**அட்டைப் பக்கங்களில்...**


1. அட்டைப்படம்
2. அழுக்காறு
3. படம் தரும் பாடம்
4. உங்கள் சிந்தனைக்கு...

## இதழாசிரியர்களிடமிருந்து...

அன்பார்ந்த வாசகர்களுக்கு இனிய நவராத்திரி மற்றும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

தீபத்திருநாள் பல இடங்களில் பலவிதமாகக் கொண்டாடப்படுகிறது. பல இடங்களில் தீபாவளி ஐந்து நாட்கள் கொண்டாடப்படுகிறது. குஜராத்திலும் நேபாளத்திலும் தீபாவளியே புதுவருடமாகக் கொண்டாடப்படுகிறது.

உத்தரப் பிரதேசத்தில் இராமன் இராவணனை வென்று தாயகம் திரும்பிய நாளாகக் கொண்டாடப்படுகிறது. வங்காளத்தில் காளியும் மற்ற இந்திய மாநிலங்களில் இலக்குமியும் இத் தினத்தில் வழிபடப்படுகின்றனர்.



இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் ஏனைய பெரும்பாலான இடங்களிலும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா நரகாசுரனை அழித்து மக்களைக் காத்தருளிய தினமாகத் தீபாவளியைக் கொண்டாடுகிறோம். ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தியை சமய பாடசாலை மாணவர்கள் கொண்டாடியபோது உருவாக்கிய மேடை அலங்காரமே இம்முறை எமது அட்டைப்படமாக உள்ளது.

நரகாசுரன் தீயவன். கிருஷ்ண பரமாத்மா தெய்வீகமானவர். தீய சக்தி மக்களை ஆட்டிப் படைக்கும்போது தெய்வசக்தி அதிலிருந்து காப்பாற்றுகிறது. இந்தக் கதை என்றோ நடந்த கதை மட்டுமன்றி இப்போதும் எம் உள்ளங்களில் நடைபெற்று வருகிறது.

எம் உள்ளே அசுரர்கள், அதாவது தீய குணங்களும் தேவர்கள், அதாவது தெய்வ குணங்களும் இருக்கின்றன. அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் இடையிலுள்ள முரண்பாடுபோல் எம் மனதில் தீய சிந்தனைகளும் நல்ல சிந்தனைகளும் எப்போதும் முரண்பட்டுக் கொண்டிருக்கின்றன. அசுரர்கள் தொல்லையால் மக்கள் அமைதியை இழப்பதுபோல் தீய சிந்தனைகளால் எமது மனது அமைதியற்றதாகிறது.

கிருஷ்ணன் நரகாசுரனை அழித்து அமைதியை ஏற்படுத்தியதுபோல் அசுர குணங்களான கோபம், பொறாமை, சுயநலம், சோம்பல் போன்ற இருளைப் போக்குவதற்கு சாந்தம், அன்பு, பொதுநலம் போன்ற தெய்வீகக் குணங்கள் தேவை.

இந்த தெய்வீகக் குணங்களை அதாவது நற்சிந்தனைகளை நாங்கள் மனதில் வளர்க்க வேண்டும். அதற்கு இறை வழிபாடும் நல்லோர் இணக்கமும் அவசியம். இறைவனைப் பிரார்த்தித்து அவனது அருளைப் பெற்றால் எத்தகைய தீமையிலிருந்தும் எம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம். அத்துடன் நற்சிந்தனைகளை வாசிப்பது, இலகுவானதும் பயனுள்ளதுமான வழி ஆகும். நற்சிந்தனைகளை உள்வாங்குவதற்குச் சிறந்த பருவம் மாணவப் பருவமே. எனவே-தான் மாணவர்களுக்கு அறநெறிக் கல்வி அத்தியாவசியமாய் உள்ளது.



அவ்வகையில் அறநெறி அமுதமும் எமக்கு நற்சிந்தனைகளைப் புகட்டி, அவற்றைப் பலம் பொருந்தியதாக்கி எமது உள்ளங்களில் ஒரு கிருஷ்ணனை உருவாக்கும். அந்தக் கிருஷ்ணன் எமது உள்ளங்களில் இருளாய்ப் படர்ந்திருக்கும் நரகாசுரனை வதம் செய்து எங்கள் உள்ளங்களில் ஒளியேற்றுவார். அந்த ஒளியைப் பெற்றால் எம் உள்ளங்களில் ஒவ்வொரு நாளும் தீபாவளியே.



இதற்குத் துணையாக இருக்கும் இவ் அறநெறி அமுதத்தை பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர், தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் பாதக் கமலங்களில் சமர்ப்பிக்கிறோம். இத் தீபத் திருநாளில் எம் மனது இருள் நீங்கி ஒளியைப் பெறுவதற்கு திரிமூர்த்திகளின் அருளை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

பஞ்சதந்திரக் கதை

# ஆசைப்பட்ட பிராமணன்

அது ஒரு கிழப்புலி. மிகவும் வயதாகிவிட்டது. அங்குமிங்கும் ஓடி இரைதேட முடியாத நிலை. அதற்காக வயிறு பசிக்காமல் இருக்குமா? வேளா வேளைக்கு அதற்குப் பதில் சொல்லியாக வேண்டுமே! அது, வெகு நாட்களாக ஒரு சோடி பொற்காப்புகள் வைத்திருந்தது. அதை யாருக்காகிலும் கொடுத்துவிட வேண்டும் என்று தீர்மானித்திருந்தது.



ஒரு நாள் அக்கிழப்புலி அங்கிருந்த ஓர் ஏரியில் நீராடிவிட்டு கையில் தருப்பையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தது. அந்தச் சமயம் பார்த்து பிராமணன் ஒருவன் அப் பக்கமாக வந்தான். அவனைக் கண்டதும், "ஓ! பிராமணா! இதோ இந்தப் பொற்காப்புகளை வாங்கிக் கொண்டு போ!" என்று சொல்லி அந்தக் காப்பையும் எடுத்துக் காட்டியது.



அதைக்கேட்ட பிராமணன் சற்று நின்று ஆலோசித்தான். "இந்தப் பொற்காப்புகள் நமக்கு வலியக் கிடைக்கிறது! ஆனால் அதைக் கொடுப்பதோ ஒரு புலி! அது துஷ்ட மிருகமாயிற்றே! காப்பை வாங்க அதன் அருகில் சென்றதும், அது நம் மீது பாய்ந்துவிட்டால் என்ன செய்வது? என்ன தர்ம சங்கடமான நிலை! அதற்காக, இந்தப் பொற்காப்புகளைக் கைவிடுவதற்கும் மனம் வரவில்லையே! என்ன செய்வது? உம், மரணம் எப்படியும் - இப்பொழுது இல்லாவிட்டாலும் எப்பொழுதோ ஒரு நாள்- வந்தே தீரப்போகிறது! அதைத் தடுக்க முடியுமா?" என்றெல்லாம் யோசித்தான் அவன்.

"ஓ புலியாரே! அது பொற்காப்புகள்தானா? நன்றாய்த் தூக்கிக் காட்டும் பார்ப்போம்" என்றான்.



"ஓ! அது வேறு சந்தேகமா உமக்கு! இதோ நன்றாகப் பார்த்துச் சொல்லும் பிராமணனே!" என்று நன்றாய்த் தூக்கிக் காட்டியது. அந்தப் பொற்காப்புகள் பளபளத்தன.

'அது சரி! நீயோ புலி! உன்னிடத்தில் எனக்கு நம்பிக்கை வேண்டுமே?' என்று கேட்டான் பிராமணன்.

"அப்படிச் சந்தேகப்படாதே. நானோ வயோதிபன். வைகறையில் எழுந்து நாள்தோறும் முழுகி தவறாமல் ஸ்நானம் செய்து கொண்டிருக்கிறேன். அதோடு என்னைச் சற்றுப் பார் எனக்குப் பல்லும் கிடையாது. நகமும் கிடையாது. இன்னும் என் மீது நம்பிக்கை இல்லையோ? தருமங்களையெல்லாம் நான் நன்கு அறிவேன். அதனால்தான் இப்பொழுது இந்தப் பொற்காப்புகளை உனக்குக் கொடுக்க விரும்புகிறேன். இதைக் கொண்டே நீ எளிதில் என்னிடம் நற்குணமிருக்கிறதா அல்லது துர்க்குணமிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ளலாமே" என்றது புலி.

"நீ சொல்வதெல்லாம் சரிதான்! இருந்தாலும் புலி பொல்லாதது, ஆளைப் பார்த்ததும் கொன்றுவிடும் என்று சொல்கிறார்களே! அதற்கு என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான் பிராமணன்.

"நான் தரும சாஸ்திரம் அறிந்தவன் என்பதை உனக்கு முன்பே சொல்லியிருக்கிறேன்! என் பிராணன் எனக்கு எப்படித் தித்திப்போ, அப்படியேதான் எல்லோருக்கும் இருக்கும் என்பதை நான் அறியமாட்டேனா! எப்பொழுதும் சாதுக்கள் பிராணிகளிடத்தில் தயையாக இருப்பார்கள். அவர்கள் தன்னைப் போலவே பிறரையும் நினைப்பார்கள், தெரியுமா? உன்னைப் பார்த்ததும் ஏதோ வறுமையில் வாடுபவனாய்த் தெரிந்தது.

அதனால் உனக்கு இந்தப் பொற்காப்புகளைக் கொடுக்கத் தீர்மானித்தேன். சாஸ்திரமும் அப்படியேதான் சொல்கிறது" என்றது புலி. தொடர்ந்தாற்போல், "நோயாளிக்குத்தான் மருந்து குணப்படுத்தும். அதனால் நீ யோசிக்கவே வேண்டாம். இந்த ஏரியில் மூழ்கிக் குளித்துவிட்டு, இங்கே வந்து இந்தப் பொற் காப்புகளை சந்தோஷமாக வாங்கிப் போ. அது, எனக்கும் மனத் திருப்தியளிக்கும்" என்றது புலி.

அது கேட்ட பிராமணனுக்கு மனம் குளிர்ந்தேவிட்டது. பேராசை யாரை விட்டது? அந்தப் புலியோ தேனொழுகப் பேசியது! பிறகு நம்பாமல் இருக்க முடியுமா?

உடனே ஏரியில் இறங்கினான் பிராமணன். நன்கு முழுகிக் குளிக்க இன்னும் எட்டிச் சென்றான். அங்கிருந்த சேற்றில் அகப்பட்டுக் கொண்டு விழித்தான். ஒரு காலைத் தூக்க முயற்சித்தான். மற்றொரு கால் உள்ளே போய்க் கொண்டிருந்தது!

பாவம்! அவன் என்ன செய்வான்! சேற்றில் மாட்டிக் கொண்டு விட்டேனே!' என்று தவித்தான்.

அதுகண்ட புலி, "பயப்படாதே பிராமணா! இதோ நான் வருகிறேன். உன்னை அந்த உளையிலிருந்து காப்பாற்றுகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே அவன் மேல் பாய்ந்தது புலி. அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. அதற்கு மேல் எண்ணுவதற்கு அவனை விடவில்லை அந்தப் புலி. அப் புலி அப் பிராமணனை



ஆக்ரோஷத்துடன் கடித்துத் தின்னத் தொடங்கியது.

அப்பொழுது அந்தப் பிராமணன் 'நாம் இப்படிப் பேராசையினால் இந்த துஷ்டனிடத்தில் நம்பிக்கை வைத்து மோசம் போனோமே!' என எண்ணி எண்ணி ஏங்கினான்!

10ஆம் பக்கம்...

# தீபத் திருநாளிலே...!

இல்லங்கள் தோறும் இன்பங்கள் பொங்கிட,
இணையேதும் இல்லாமல் தீபங்கள் எரியுது!
இதுவரை இருந்திட்ட இன்னல்கள் நீங்கிட,
இமைக்கின்ற கணந்தனில் இருளது அகலுது!

பகலவன் படர்சோதி பணிந்திடல் போதும்!
பாராளும் பதவியும் படிவந்து ஏகும்!
பதியவன் தான்பாதி பார்த்திடல் போதும்!
பாவங்கள் தான்கூடிப் பஞ்சாகிப் போகும்!

அணையாது ஒளிர்ந்திடும் ஆலய தீபம்,
அல்லலுற்ற அவனிக்கு அடைக்கலம் தருகுது!
அகந்தனில் மிளிர்ந்திடும் ஆன்ம தீபம்,
அன்பினால் அவனியை அணைத்திட பெருகுது!

திக்கற்ற வாழ்வில் திசையது தேடவே,
தீபத்திரு நாளிலே ஒன்றாகக் கூடுவோம்!
தித்திப்பு மிகுந்தநல் தேனமுதம் கூடவே,
தீபத்தில் மிளிர்ந்திடும் தேவனைப் பாடுவோம்!

ஆக்கம்: **ச. துளக்சன்**, (பழைய மாணவன்)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

ஒஒஒ ஒஒஒ ஒஒஒ

**வெண்மதியில் தண்ணொளியில்**

**விண்மீனின் விண்ணொளியில்**

**நண்பகலின் வளையத்தில் நாதன் ஒளிர்கின்றான்,**

**அவன் அழகும் ஆற்றலதும் ஒளியின்ஒளி ஆனவையே!**

***- சுவாமி விவேகானந்தர்***



## உண்மைச் சம்பவம்

'உயிர்களுக்கு உதவி செய்ய வேண்டும், எல்லா உயிர்களையும் தம்முயிர் போல் நேசிக்க வேண்டும்' எனப் புத்தகத்தில் கற்ற நாங்கள் சிலவேளையிலேயே உதவி செய்ய முன்வருகின்றோம்.

## ஜீவ காருண்யம்



கென்யாவின் தலைநகரான நைரோபியாவில் அமைந்துள்ள காட்டில் அநாதரவாகக் கைவிடப்பட்ட நிலையில் இருந்த குழந்தை எவ்வாறு காப்பாற்றப்பட்டது என இந்த இதழில் பார்ப்போம்.

தனது குட்டிகளுக்காகக் காட்டில் உணவு தேடும் போது கந்தலாடைகளால் சுற்றப்பட்டு பெற்றோரினால் கைவிடப்பட்ட நிலையில், பெண் குழந்தை ஒன்று இருப்பதைக் கண்ட தெருநாய்



அந்தக் குழந்தையை வாயினால் தூக்கிய வண்ணம், முட்கள் நிறைந்த வேலியைக் கடந்தும், சனநெரிசல் நிறைந்த பாதையின் ஊடாகவும் தூக்கிச்சென்று தனது குட்டிகளுடன் வைத்தது. இவ்வேளையில் அத்தெருநாய்க்கு தோன்றிய எண்ணம் ஓருயிர் அநாதரவாக உள்ளது என்பது மாத்திரமே. இப்படிப்பட்ட எண்ணம் எவருக்குத்தான் வரும். பெண் குழந்தையின் அழுகுரல் கேட்டு அப்பாதை வழியே சென்ற இரு சிறுவர்கள் அவர்களின் தாயாருக்கு தகவலை அறியப்படுத்தினர்.





காப்பாற்றப்பட்ட குழந்தை

நாய்க்குட்டிகளுடன் குழந்தை இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அச் சிறுவர்களின் தாயார் உடனடியாக வைத்தியசாலைக்கு குழந்தையை எடுத்துச் சென்று தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்தனர்.

சில வார தீவிர சிகிச்சையின் பின் அக் குழந்தை காப்பாற்றப்பட்டு கென்ய அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

அத் தெருநாய் கென்யா அரசாங்கத்தால் 'Mkombozi' என பெயர் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டது. மேலும் 'Mkombozi'யும் அதனது குட்டிகளும் 'Kenya SPCA' எனும் கூட்டமைப்பினால் எடுக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன.



*சிகிச்சையின் பின் குழந்தையை Mkombozi பார்வையிட்ட போது*

ஆறறிவு படைத்த மனிதர்களுக்குக் கூட இல்லாத நல்லொழுக்கம் ஐந்தறிவு படைத்த உயிரினங்களுக்கு உள்ளன. எறும்பைப் பார்த்து ஒற்றுமையைக் கற்றுக் கொள். காகத்தைப் பார்த்து பகிர்ந்துண்ணக் கற்றுக்கொள் என முன்னோர்கள் கூறியுள்ளனர்.

புத்தக அறிவில் மட்டும் நாம் பெற்ற. **'எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல் நேசி'** என்பதை இந்நாய் அதன் வாழ்நாளில் செய்தும் காட்டியுள்ளது.

ஆக்கம்: **ஜெ. அஜந்தி,** பழைய மாணவி (தன்னார்வத் தொண்டர்),
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

**( 7ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)**

ஆகையால் நாம் எதையும் மிகவும் ஆழ்ந்து யோசனை செய்த பிறகே செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் நமக்கு ஒரு தீங்கும் ஏற்படாது.

துஷ்டர்கள் வேத அத்தியயனம் பண்ணியிருந்தாலும், தரும சாஸ்திரம் படித்திருந்தாலும், அவர்கள் வார்த்தையில் நம்பிக்கை வைக்கவே கூடாது! ஏனென்றால், அவனுடைய துஷ்ட சுபாவம் இயற்கையானது. அது போகவே போகாது!

தொகுப்பு: இ. ரிசிகா, தொண்டராசிரியை
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

# பிருஹதாரண்யக உபநிடதம்

அன்பார்ந்த வாசகர்களே! சென்ற இதழில் மதுகாண்டத்தின் இரண்டாவது அத்தியாயத்தைப் பற்றி அறிந்தோம். இவ் இதழில் மிகுதிப் பகுதியைக் காண்போம்.

## 2. முனி காண்டம்

♦ ***மூன்றாவது அத்தியாயம்***

விதேக மன்னரான ஜனகர் முன்னொரு காலத்தில் யாகம்



ஒன்று செய்தார். அங்கு வந்திருந்த பண்டிதர்களில் சிறந்தவருக்கு வழங்குவதற்காக ஆயிரம் பசுக்களையும், அதன் கொம்புகளில் பொன் மூட்டைகளையும் கட்டி வைத்தார். அங்கு



கூடியிருந்தவர்களை நோக்கி "உங்களில் சிறந்தவர் யாரோ, அவர் இப்பசுக்களை ஓட்டிச் செல்லலாம்" என்றார்.

அப்போது அங்கு யாரும் முன்வராத நிலையில் யாக்ஞவல்கியர் எழுந்து, அப்பசுக்களை ஓட்டிச் செல்லத் தயாரானார். அவ்வேளையில் யாக்ஞவல்கியரைச் சோதிக்கும் எண்ணத்தோடு அஸ்வலர், ஆர்த்தபாகர், புஜ்ஜ்யு, உஷஸ்தர், காஹோலர் மற்றும் சாகல்ய முனிகள் வினவிய வினாக்களுக்குப் பதிலளித்து, தம்மைச் சிறந்த பண்டிதராக நிலைநாட்டினார். அத்துடன் நின்று விடாமல், சபையில் இருக்கின்ற மற்றைய பண்டிதர்களுக்குப் போதிய சாஸ்திர அறிவு இல்லை என்பதையும் தெளிவுபடுத்த எண்ணி அவர்களிடம் கேள்வி கேட்கத் தொடங்கினார் யாக்ஞவல்கியர்.

"மனிதன் மரணத்திற்குப் பிறகு மீண்டும் எங்கிருந்து தோன்றுகிறான்?" என்ற கேள்விக்கு யாரும் விடை கூற முன்வரவில்லை. அவ்வேளை மனிதனுக்கு மறுபிறவி உண்டு.

அப்படி மீண்டும் மீண்டும் பிறக்கின்ற மனிதன் பரம்பொருளாகிய இறைவனிடமிருந்தே தோன்றுகிறான், அவரிலேயே வாழ்கிறான், அவரிலேயே ஒடுங்குகிறான் என்ற கருத்துடன் இவ் அத்தியாயம் நிறைவடைகிறது.

- **4ஆவது அத்தியாயம்**

தாம் அறிந்த தேவதைகளின் தியானங்களைப் பற்றி யாக்ஞவல்கியர் ஜனகருக்கு கூறுவதாவது :

| தேவதை | உடம்பில் இருப்பிடம் | ஆதாரம் | விளக்கப் பெயர் |
|---|---|---|---|
| பிராண தேவதை | பிராணன் | இறைவன் | பிரியம் |
| கண் தேவதை | கட்புலன் | இறைவன் | உண்மை |
| செவி தேவதை | செவிப்புலன் | இறைவன் | எல்லையற்றது |
| மன தேவதை | மனம் | இறைவன் | ஆனந்தம் |
| இதய தேவதை | இதயம் | இறைவன் | நிலைபேறு |

அடுத்தடுத்த பகுதிகளில் ஆன்மாவின் மூன்று நிலைகள் பற்றியும், உலகிற்கு ஒளி தரும் இறைவன் பற்றியும், ஜனகரின் கேள்விகளுக்கு யாக்ஞ்வல்கியரின் உபதேசம் அமைந்துள்ளது.

## 3. கில காண்டம்

'கில' என்றால் பொது என்று பொருள். பல்வேறு தியானங்கள், நல்லொழுக்க நியதிகள் போன்றவற்றை இந்தக் கடைசிக் காண்டம் கூறுகிறது.

வாழ்க்கையில் தவிர்க்க முடியாததான நோய், மரணம், என்பவற்றை எப்படி அணுகுவது, இறை நெறியில் தடைகளாகக் கருதப்படுகின்ற பணம், காமம், ஆகிய இரண்டையும் எப்படி கையாள்வது என்ற கருத்துக்கள் இங்கே போதிக்கப்படுகின்றன.

வேதகாலச் சிந்தனையின் மணிமகுடமாகத் திகழ்பவை உபநிடதங்கள்.

அவற்றுள், 108 பொதுவாகக் கணக்கில் கொள்ளப்படுகின்றன. அவற்றில், பத்து உபநிடதங்கள் முக்கியமானவை. தச உபநிடதங்கள் என அழைக்கப்படும் அவை முறையே ஈச, கேன, கட, ப்ரச்ன, முண்டக, மாண்டூக்கிய, ஐதரேய, தைத்திரீய, சாந்தோக்கிய, பிருஹதாரண்யக உபநிடதங்களாகும்.

அறநெறி அமுதத்தில் அமுதம் 11 துளி 2 முதல் அமுதம் 16 துளி 4 வரை இவற்றை சுருக்கமாகக் கண்டோம். இவ்விதமுடன் தச உபநிடதங்கள் நிறைவடைகின்றன.

ஆக்கம்: ஜெ. காயத்திரி, உயர்தரம்,
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

## படம் தரும் பாடம்

இந்தப் படத்திலிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளும் பாடம் என்ன? உங்கள் கருத்துக்களை அண்ணளவாக 100 சொற்களில் எழுதி அனுப்புங்கள். சிறந்த ஆக்கம் உரிய திருத்தங்களுடன் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.




கதை: சி. அபிராமி

# அனந்தாழ்வாரின் பக்தி

படம்: சி. ஸ்ரீ. சமித்ரா

'ஓர் ஆத்மா பெற வேண்டிய இறுதியான பேறு தொண்டே' என்பது ஸ்ரீவைணவக் கோட்பாடுகளில் மிக முக்கியமானது. இந்தப் பேற்றையே 'கைங்கர்ய ஸ்ரீ' என்று ஸ்ரீ வைஷ்ணவர்கள் குறிப்பிடுவார்கள். இத்தகைய பக்தியில் சிறந்த அனந்தாழ்வார் என்ற வைஷ்ணவ ஆசாரியார் 950 ஆண்டுகளுக்கு முன் திருவேங்கட மலையில் வாழ்ந்து வந்தார்.





5 உடனே வேலை துரிதமாக நடைபெற ஆரம்பித்தது. இதைக் கண்ட அனந்தாழ்வாருக்கு சந்தேகம் ஏற்பட்டது.
எப்படி இவ்வளவு விரைவாக திரும்பி வருகிறாய்? பாதி வழியிலேயே மண்ணைக் கொட்டி விடுகிறாயா? என்ன?
என்னை மன்னித்து விடுங்கள் சுவாமி! அச்சிறுவன், நான் எவ்வளவோ கூறியும் கேளாமல் என்னிடமிருந்து மண்ணைப் பெற்று கொட்டி விட்டு வருகிறான்!
6 இதைக் கேட்டு கோபமடைந்த அனந்தாழ்வார், அச்சிறுவனை அடிப்பதற்காக துரத்த ஆரம்பித்தார். ஆனால் அவனைப் பிடிக்க முடியாமல் போகவே, தம் கையில் இருந்த கல்லை அவன் மீது வீசினார். அக்கல் சிறுவனின் முகவாயில் பட்டு இரத்தம் கசிய ஆரம்பித்தது
7 உடனே அச் சிறுவன் கோயிலுக்கு ஓடினான். கரு-வறைக்குள் சென்று மறைந்தான்.
8 அனந்தாழ்வாரும் கோயிலுக்குள் சென்று பார்த்தார். அங்கே......
கசிகின்றதே!
சிறுவ-னாக வந்தது திருவே ங்கட நாதன் தானோ?
9 பெருமாளே! கோவிந்தா! நான் எத்தகைய பெரும் அபராதம் இழைத்து விட்டேன். அடியேன் அறியாமல் செய்த பிழையை பொறுத்தருளமாட்டாயா? இதோ! உன் காயத்திற்கு பச்சைக்கற்பூரம் இடுகின்றேன்!
அனந்தாழ்வாரின் பக்தியின் பெருமையை உலகிற்கு உணர்த்தவே, இன்றும் திருவேங்கட மலை ஸ்ரீனிவாசப்பெருமானின் முகவாயில் பச்சைக் கற்பூரம் சாத்தப்படுகின்றது.

# குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1 | | 2 | | | |
| 3 | | | | | 4 | |
| | | | | 5 | | |
| | | | | | | |
| | 6 | 7 | | | | |
| 8 | | | | | | 9 |
| 10 | | | | 11 | | |

### இடமிருந்து வலம்

1. அருளாளர்களின் கூட்டுறவு
3. எமக்குப் பக்க பலமாக இருப்பவர்கள்
7. கலப்பை
8. அருவம் இறைவனின் ____________ வடிவம்
10. முக்தி
11. அகர முதல எழுத்தெல்லாம் _____ பகவன் முதற்றே உலகு

### வலமிருந்து இடம்

5. இராமகிருஷ்ணர் அவதார ____________________. (5 எழுத்துக்கள், குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

2. இராமகிருஷ்ணர் ________________ ஸ்தாபகர்
3. மாணிக்கவாசகருக்கு அருள்வதற்காக சிவன் ______யைப் பரி ஆக்கினார்.
4. வியாழ பகவான்
6. அட்டாங்க நமஸ்காரத்தில் தரையில் படும் உறுப்புக்களின் எண்ணிக்கை
7. அன்பால் உலகை வென்றவர்

### கீழிருந்து மேல்

9. தியானம் செய்வதற்கு உகந்த ஆசனம்

விடைகள் அடுத்த இதழில்...



காவேரி நதி

பாரத தேசத்தின் புண்ணிய நதிகளான கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, சிந்து, காவேரி என்ற சப்த நதிகளில் முதல் ஆறு நதிகளைப் பற்றி சென்ற இதழ்களில் பார்த்தோம். இந்த இதழில் இறுதியாக உள்ள காவேரி நதியைப் பற்றிப் பார்ப்போம்.

இப்புனித நதியைப் பற்றிய வரலாறுகள் ஆக்நேய புராணம், பிரம்ம வைவர்த்த புராணம், ஸ்கந்த புராணம், இதிகாசங்கள், தமிழ் இலக்கியங்கள் முதலாக பல நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவற்றில் ஸ்கந்த புராணத்தில் பின்வருமாறு கூறப்படுகின்றது. அதாவது இமாலயத்தில் பரமேஸ்வரன் பார்வதியின் திருக்கல்யாணத்தின்போது கோடிக்கணக்காகக் குழுமி இருந்தவர்களின் பாரம் தாங்க முடியாமல் நிலம் தாழ்வாகச் சரிந்தது. உடனே சிவபெருமான் அகத்திய மகரிஷியை அழைத்தார். முனிவரே! நீர் தென் திசை நோக்கிச் செல்வீராக என்று பணித்தார். ஆனால் சிவன் அவரை வெறுங்கையுடன் அனுப்பவில்லை.



புனித நீர் நிரம்பிய ஒரு கமண்டலத்தை அவருக்கு ரக்ஷையாக அளித்து அதன் மகத்துவத்தையும் அம்முனிவருக்கு விளக்கினார். இறைவன் ஆணையைச் சிரமேற் கொண்ட குருமுனிவர் தன் கமண்டலத்துடன் தென் திசை நோக்கி நடக்கலானார். வழியில் விதர்ப்ப தேசத்தில் தங்க நேரிட்டது. அந்நாட்டு அரசன் தற்செயலாக அகத்தியரைச் சந்தித்தான். அவரது மேன்மைகளை ஏற்கனவே அரசன் அறிந்திருந்தான். அதனால் அவன் தன் மகள் 'உலோப முத்ரா'வை அவருக்குத் திருமணம் செய்து கொடுத்தான்.



தனது மனைவியோடு தென்நாடு அடைந்த அகத்தியர் தவத்திற்கேற்ற இடத்தைப் பிரம்மகிரியில் தெரிந்தெடுத்து அங்கு ஆசிரமம் அமைத்து தவம் செய்யத் தொடங்கினார். இக்காலத்தில் தென்னாடு பல்லாண்டுகளாக மழையில்லாமல் வறட்சியால் வாடியது. நிலத்தடி நீரும் வற்றியது. இங்கு வாழும் மக்கள் படும் துயரை துடைப்பதற்கு விநாயகப் பெருமான் திருவுளம் கொண்டார்.

இக்கடும் வறட்சியைப் போக்க அகத்தியர் கமண்டல நீர் தான் உகந்தது என்று எண்ணினார். விநாயகர் காக்கை உருவம் எடுத்துக் கொண்டு அகஸ்தியர் தவம் புரியும் பாறைக்கு அருகில் சென்றார். அங்கு அவருக்கு அருகில் இருந்த கமண்டலத்தை தன் கால்களினால் தட்டிக் கவிழ்த்து விட்டார். கொட்டப்பட்ட நீர் உடனே ஓர் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது. இதனால் பாலைவனமாக இருந்த தென்னாடு சோலை வனமாகியது. கங்கையினால் கொட்டிய தண்ணீர் விரிவாகப் பரந்து ஓடியதால் 'காக விரி' எனப்பட்டு பின் காலப்போக்கில் மருவிக் 'காவேரி' எனப் பெயர் பெற்றது.



இதன் உற்பத்தி ஸ்தானம் கர்நாடக மாநிலத்தில் குடகு மாவட்டத்தில் உள்ளது. இம் மாவட்டத்தின் தலைநகரம் 'மெர்காரர்' என்னும் தற்கால 'மடிகேரி' ஆகும். இதன் மூலஸ்தானத்தைத் 'தலைக் காவேரி' என அழைப்பர். இவ்விடம் தரை மட்டத்திலிருந்து 1535 மீற்றர் உயரத்தில் உள்ளது. இத் தலைக்காவேரி இருக்கும் இடம் மிகவும் அழகானது. இயற்கைச் சூழல் பேரனந்தத்தைத்தரும் இப் பிரதேசங்களில் அதிக மழை பெய்து வருவதால் மரங்கள் நிறைந்த காடுகள், அடர்ந்த புதர்கள், உயர்ந்த மலைகள் காணப்படுகின்றன. இடையிடையே ஆங்காங்கே சிற்றாறுகள் வழிந்தோடுகின்றன.

இத் தலைக்காவேரி இருக்கும் இடம் மிகவும் அழகானது. இயற்கைச் சூழல் பேரானந்தத்தைத்தரும் இப் பிரதேசங்களில் அதிக மழை பெய்து வருவதால் மரங்கள் நிறைந்த காடுகள், அடர்ந்த புதர்கள், உயர்ந்த மலைகள், காணப்படுகின்றன. இடையிடையே ஆங்காங்கே சிற்றாறுகள் வழிந்தோடுகின்றன. காவேரியை ஒரு அம்மனாகப் பாவித்து வணங்கினாலும் தலைக் காவேரியில் அவளுக்கு என்று ஒரு கோயில் கிடையாது. 4x4 என்ற அளவுடைய சதுர வடிவமான ஒரு தொட்டி அல்லது குண்டத்திலிருந்து இந்நதி தோன்றுகிறது. இக்குண்டமே காவேரி அம்மனின் கருவறையாகும். இதனால் காவேரி அம்மனுக்குரிய தினசரி வழிபாடுகள் இக்குண்டத்திலேயே நடைபெறுகின்றன.


**4x4 என்ற அளவுடைய சதுர வடிவமான தொட்டி**

இக்குண்டத்தில் ஆண்டுக்கு ஒருமுறை ஒரு அதிசயத் தெய்வீக நிகழ்ச்சி நடைபெறும். இந் நிகழ்ச்சியைத் 'தீர்த்தோற்பவ' எனக் கூறுவர். அக்டோபர் மாதத்தில் வரும் 'துலாசங்கராந்தி' நாளில் இப்பிரம்மகுண்டத்தில் குறிப்பிட்ட முகூர்த்தத்தில் பால் பொங்குவது போல் குபீரென்று காவேரியின் புனித நீர் பொங்கி மேல் எழும்புமாம். உடனே அக்குண்டத்திற்குக் கற்பூர ஆரத்தி காட்டுகின்றார்கள். தலைமைக் குருக்கள் குனிந்து குண்டத்திலிருக்கும் பொங்கும் புனித நீரை குடத்தில் நிரப்பியவுடன் பொங்கிய நீர் மடமடவென்று கீழேயிறங்கி பழைய நீர்மட்டத்தை அடைந்துவிடும். பிரதம குருக்களால் எடுக்கப்பட்ட புனித நீர் அங்கு கூடியிருக்கும் பக்தர்கள் மீது தெளிக்கப்படும். இதன்பின் மற்றைய குருக்கள்மாரும் தமது செம்புகளில் புனித நீரை நிரப்பி பக்தர்களுக்கு விநியோகிப்பர்.


**தீர்த்தோற்பவ திருவிழா - தலைக் காவேரி**

இவ்வாறு நடக்கும் அற்புத நிகழ்ச்சியை ஒட்டி ஒரு பெருந்திருவிழாவும் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவை 'ஸ்ரீ காவேரி ஜாத்ரா' என அழைப்பர். இந்நாளில் ஆயிரக் கணக்கான மக்கள் கூடி விழாவைச் சிறப்பிப்பர்.

தலைக் காவேரியில் பிரம்ம குண்டத்திலிருந்து வெளிவரும் நீர் அதனைச் சார்ந்த 30 மீற்றர் நீளம் 30 மீற்றர் அகலம் உள்ள ஒரு குளத்தில் வீழ்கின்றது. இக் குளம் 2 1/2 அடி ஆழம் மட்டுமே உள்ளதால் பக்தர்கள் மூழ்கி எழ வசதியாகவும், ஆழத்தில் மூழ்கி அவஸ்த்தைப்படாமல் இருக்கவும் இது உதவுகின்றது. இதற்கு மேல் நிரம்பும் நீர் வழிந்தோடிவிடும். இக் குளத்தை 'ஸ்ரீ காவேரி புண்ணிய ஸ்நான' குளம் என்று கூறுவர். இக்குளத்திலிருந்து வழிந்தோடும் காவேரி பன்முறை குழிகளில் வீழ்ந்து எழுந்து பின் புதருக்குள் மறைந்து பின் மலை இடுக்குகளிலும் மறைந்து மறைந்து ஓடுவதால் இக் காவேரியை 'அந்தர்வாஹினி' என்றும் கூறுவர்.

பின் இந்த நதி மலைச்சரிவில் வெளிப்பட்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து 7கி.மீ தொலைவில் உள்ள பாகமண்டலாவில் காவேரியுடன் 'கனகா' என்ற ஆறும் 'சுஜோதி' என்ற ஆறும் சங்கமமாகின்றன. இதை அங்கே 'திரிவேணி' என்று குறிப்பிடுகின்றனர். இவ்வாறாகக் குடகில் பிறந்து கர்நாடக, கொங்கு பிரதேசங்களில் தவழ்ந்து தமிழ்நாட்டில் பாய்ந்து தான் பாயும் பிரதேசங்களை வளமாக்கி இறுதியாகக் கடலில் சங்கமமாகிறது.




தலைக் காவேரி தலத்தில் விநாயகருக்குத் தனித்தனியாக சிறு கோயில்கள் உள்ளன. அகத்தியர் சிவனிடமிருந்து பெற்ற ப்ருதிவி லிங்கம் சிவன் கோயில் கருவறையில் உள்ளது.

இக் கோயிலின் வடக்கில் 'பிரம்ம கிரி' என்ற சிகரம் உள்ளது. இவ்விடத்தில் 'சப்த ரிஷிகள்' பலமுறை யாகம் செய்துள்ளார்கள் என்று நம்பப்படுவதால் இது புனித இடமாக மதிக்கப்படுகின்றது. தியானத்திற்கும் ஜபத்திற்கும் மிகவும் உகந்த இடமாகக் கருதப்படுகின்றது.

காவேரிக்குத் தக்ஷிண கங்கை, பொன்னி, விதிசம்பூதை, கல்யாணி, சமதாயினி, தக்கணபத சாவணி எனப் பல பெயர்கள் உண்டு.

தமிழ் இலக்கியங்களில் பொன்னி என்ற பெயரில் காவேரியின் புகழைக் காணலாம். இக்காவேரி பாயும் தமிழ்நாட்டில் 802 கி.மீ நீளத்தில் இரு கரைகளிலும் சேர, சோழ, பாண்டியர் அரசாட்சி புரிந்தனர். தமிழரின் வாழ்வில் இரண்டறக் கலந்த காவேரிக்கு இன்று தமிழ்நாட்டில் ஆடிப் பெருக்கு, பதினெட்டாம் பெருக்கு என்று விழா எடுத்து வருகின்றனர்.

**காவேரி த்யான ஸ்லோகம்**

அச்ச ஸ்வச்ச லஸத்து கூல வஸனாம் பத்மாஸனத்யாஸினீம்
ஹஸ்தந்யஸ்த வராபயாப்ஜ கலசாம் ராகேந்து கோடி பிரபாம்
பாஸ்வத் பூஷண கந்த மால்ய ருசிராம் சாரு ப்ரஸ்ன்னானாம்
கங்காதி ஸமஸ்த தீர்த்த நிலையாம் த்யாயாமி காவேரிகாம்.

**பொருள்:** தூய வெண்பட்டை ஆடையாகக் கொண்டவளும், பத்மாஸனத்தின் மேல் அமர்ந்தவளும், கரங்கள் முறையே அபயமுத்திரை, வரதமுத்திரை, தாமரை மலர், கலசம் இவைகளைக் கொண்டவளும், கோடி சந்திர பிரகாசத்துடன் விளங்குபவளும், அழகு பொருந்திய முகப்பொலிவுடன் கூடியவளும், கங்கை முதலான சமஸ்த புண்ணிய தீர்த்தங்களுக்கு இருப்பிடமாக விளங்குபவளுமான காவேரி எனும் தெய்வப் பொன்னியை நான் தியானிக்கிறேன்.

ஆக்கம்: **சோ. பிரசோபிதா**, பழைய மாணவி (தன்னார்வத் தொண்டர்), இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை


# யோகம்

## அர்த்த மத்ஸ்யேந்திராசனம்

*(இவ்வாசனம் பெரிய யோகியான மத்ஸ்யேந்திரரின் நினைவாகப் பெயரிடப்பட்டுள்ளது)*

செய்முறை:

1. இரண்டு கால்களையும் நேராக நீட்டியவாறு, கைகள் இரண்டும் தொடைக்குப் பக்கத்தில் இருக்கவும்.
2. வலது காலை மடித்து இடது கால் தொடையின் கீழ் வைக்கவும்.
3. இடது காலை மடித்து வலது கால் மூட்டுக்கு அருகில் வைக்கவும். (எதிர்ப்பக்கம்)




4. தற்போது, வலது கையை இடது கால் மூட்டைச் சுற்றிக் கொண்டு சென்று, இடது கால் பெருவிரலைப் பிடிக்கவும். இடது கையைப் பின்புறமாகச் சுற்றி வலது கால் தொடையைத் தொட முயற்சிக்கவும். தலையை இடது தோள்பக்கம் திருப்பி பின்னே பார்க்க வேண்டும்.
5. பின்பு மெதுவாக இடது கையை முன்னே கொண்டுவந்து, பின்பு வலது கையை கால் விரலில் இருந்து எடுத்து பழைய நிலைக்கு கொண்டு வரவும். ஒவ்வொரு கால்களாக நீட்டி ஒய்வு நிலைக்கு வரவும். இதே போன்று மறுபக்கம் செய்யவும். (இடது காலை மடித்தல் வேண்டும்).

கவனிக்க வேண்டியவை:

- இடுப்பை நிமிர்த்த வேண்டும்.
- குதிக்கால்களின் மேல் அமரக்கூடாது.


பலன்கள்:

- பக்கவாட்டான சுழற்சியானது முதுகெலும்பை நன்கு வளையச் செய்கிறது.
- முதுகெலும்பை ஒட்டிய எல்லா நரம்புகளும் தூண்டப்படுகின்றன.
- மலச்சிக்கலைத் தடுக்கிறது.
- அஜீரணக் கோளாறைப் போக்குகிறது.
- சர்க்கரை வியாதி, சிறுநீரகம் சம்பந்தமான நோய்களைப் போக்குகிறது.
- கல்லீரலின் வீக்கத்தைக் குறைக்கிறது.

## வக்ராசனம்

செய்முறை:

1. அர்த்த மத்ஸ்யேந்திராசனத்தில் கூறியது போன்று, நிமிர்ந்து நேராக இருக்க வேண்டும்.
2. வலது காலை மடக்கி இடதுகால் மூட்டின் பக்கத்தில் வைக்கவும் (எதிர்பக்கத்தில்). இடதுகால் நீட்டியவாறு இருக்க வேண்டும்.
3. இடது கையை வலது கால் மூட்டைச் சுற்றிக் கொண்டு வந்து, வலது கால் பெருவிரலைப் பிடிக்கவும். இடுப்பை வலதுபுறமாக வளைத்து, வலது கையை சற்றுப் பின்னே ஊன்றி வைத்துக் கொள்ளவும். வலது புறமாக தலையைத் திருப்பி பின்னே பார்க்கவும்.
4. ஒரு நிமிடம் இவ்வாறு இருந்த பின்னர், தலையை முன்னே திருப்பி, கைகளை ஒவ்வொன்றாகத் தளர்த்தி, பின்பு காலையும் தளர்த்தி ஓய்வு நிலைக்கு வரவும்.



கவனிக்க வேண்டியவை:

- உள்ளங்கையைத் தரையில் நன்றாக பதித்து வைக்கவும்.
- இடுப்பின் மேல்பாகம் நிமிர்ந்தவாறு இருக்கவேண்டும்.
- சுவாசம் சாதாரணமாக இருக்கவேண்டும்.

பலன்கள்:

- அர்த்த மத்ஸ்யேந்திராசனத்தின் பலன்கள் முழுவதும் இதில் கிடைக்கும்.

ஆக்கம்: இ. பிரகலாதன், பழைய மாணவன் (தொண்டராசிரியர்)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

## கடந்த இதழில் பிரசுரிக்கப்பட்ட குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ஞா | 2 உ | ண் | மை | | னை | 3 தி |
| னி | ஷ் | 4 எ | | 5 சு | த | பூ |
| | ட் | ண் | 6 தி | ய | ந் | 7 வி |
| 8 பி | ரா | ண | ன் | பு | சி | 9 ஜீ |
| ச் | ச | ம் | | த் | ற் | வ |
| சை | ன | | | தி | 10 ந | சே |
| | ம் | 11 நா | வு | | ம் | வை |

# கேட்டுச் சுவைத்தவை



சிங்கப்பூரிலிருந்து வருகைதந்திருந்த ஸ்ரீமத் சுவாமி விமோக்ஷானந்தஜி மஹராஜ் அவர்கள் நமது ஞாயிறு சமய பாடசாலை மாணவர்களுக்கு ஆற்றிய உரையிலிருந்து ஒரு சிறிய பகுதி...

'நாம் ஏன் கோயிலுக்குச் செல்கின்றோம்?' என சுவாமிஜி கேட்டார். அதற்குப் பலர் கூறிய விடை, 'கடவுளை வழிபட' என்பதாகும். கடவுளைக் கோயிலில் மட்டும்தான் காண முடியுமா? ஏன், அவர் வேறு எங்கும் இல்லையா?' என மீண்டும் கேட்டார் சுவாமிஜி. அவர் என்ன கூறப்போகிறார் என நாங்கள் காத்திருந்தோம். சுவாமிஜி பின்வருமாறு கூறினார்:





'கடவுள் என்பவர் யார்? ஏன் அவரைக் கடவுள் என்கின்றோம்? கடவுள் என்றால் எல்லாவற்றையும் கடந்த, அதேவேளை எல்லாவற்றுள்ளும் இருப்பவர் என்பதாலேயே அவர் அவ்வாறு அழைக்கப்படுகிறார். அதேபோல் அவரைப் 'பதி' என்றும்' கோ' என்றும் கூறுவது ஏன்? அவர் உலகங்களுக்கெல்லாம் தலைவராகவும் ஜீவராசிகளுக்கு அரசனாகவும் இருப்பதால்தான் அவ்வாறு கூறுகின்றோம்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தனது பகவத் கீதையில் 'என்னை வழிபட, பெரும் செல்வமும் பகட்டும் தேவையில்லை. உண்மையான அன்புடன் ஒரு பச்சிலையைத் தந்தால் போதும்' என்கிறார். நாமும் இறைவனைக் காணக் கோவிலுக்குச் சென்று வழிபடுவதோடு நின்றுவிடாது நம்மால் இயன்ற அளவு ஏழைகளுக்கு உதவி செய்தும், நற்காரியங்களில் ஈடுபட்டும்கூட இறையருளைப் பெறலாம்.



27ஆம் பக்கம்...

# பாப்பா பாப்பா கதை கேளு...

ஒரு முனிவரிடம் இரண்டு சீடர்கள் இருந்தனர். இருவரும் பலசாலிகள், புத்திசாலிகள். ஒருமுறை தங்களில் யார் புத்திசாலி என்பதில் இவர்களுக்குள் சண்டை ஏற்பட்டது. விஷயம் முனிவரிடம் வந்தது. அவர் சீடர்களிடம், சீடர்களே! இன்று ஏனோ எனக்கு அதிகமாகப் பசிக்கிறது. சமையல் முடிய தாமதமாகும். இரண்டு பேரும் அதோ! அந்த மரத்தில் இருக்கும் பழங்களைப் பறித்து வாருங்கள், என்றார்.



குருவிடம் மிகவும் பணிவாக நடந்து கொள்ளும் அந்தச் சீடர்கள் மரத்தை நோக்கி ஓடினர். மரத்தை நெருங்க முடியாமல், முட்செடிகள் சுற்றி நின்றன. முதல் சீடன் சற்று பின்னோக்கி வந்தான். பின்னர் முன்னோக்கி வேகமாக ஓடினான். ஒரே தாவலில் மரத்தைத் தொட்டான். பழங்களை முடிந்தளவுக்குப் பறித்தான். மீண்டும் ஒரே தாவலில் குருவின் முன்னால் வந்து நின்று, பார்த்தீர்களா! கணநேரத்தில் கொண்டு வந்து விட்டேன், என்றான் பெருமையோடு.



இரண்டாமவன் ஒரு அரிவாளை எடுத்து வந்தான். முள்செடிகளை வெட்டி ஒரு பாதை அமைத்தான். அப்போது சில வழிப்போக்கர்கள் அலுப்போடு வந்தனர். அவர்கள் வெட்டப்பட்ட பாதை வழியே சென்று, பழங்களைப் பறித்துச் சாப்பிட்டனர். மரத்தடியில் படுத்து இளைப்பாறினர். சிஷ்யனும் தேவையான அளவு பழங்களைப் பறித்து வந்தான்.

இப்போது முனிவர் முதல் சீடனிடம், இரண்டாவது சீடன் தான் அதிபுத்திசாலி என்றார்.

முதலாமவன் கோபப்பட்டான். "சுவாமி! இன்னும் போட்டியே வைக்கவில்லை. அதற்குள் அவனை எப்படிச் சிறந்தவன் எனச் சொன்னீர்கள்?" என்று கேட்டான். முனிவர் அவனிடம், "சிஷ்யா! நான் பழம் பறிக்கச் சொன்னதே ஒரு வகைப் போட்டிதான்! நீ மரத்தருகே தாவிக்குதித்து, பழத்தைப் பறித்தது சுயநலத்தையே காட்டுகிறது. ஏனெனில், அதை எனக்கு மட்டுமே தந்தாய். நான் மட்டுமே பலன் அடைந்தேன்.



இரண்டாம் சீடனோ பாதையைச் சீரமைத்ததால், எனக்கு மட்டுமின்றி ஊராருக்கும் இன்னும் பல நாட்கள் பழங்கள் கிடைக்கும். எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கச் செய்பவனே அதிபுத்திசாலி" என்றார். இங்கே செயல் ஒன்று தான். ஆனால், செய்த விதத்தில் தான் வித்தியாசம்.

ஔஔ ஔஔ ஔஔ

( 25ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)

**'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்'** என்பது சான்றோர் வாக்கு. அதற்கு ஏற்றாற்போல நாம் வாழ்ந்தாலே போதுமானது. நாம் எந்தக் காரியத்தைச் செய்யும்போதும் இறை சிந்தனையுடன் இருந்தால் அக்காரியம் நன்றாக நடைபெறும். எனவே இன்றுமுதல் நீங்களும் நல்ல பழக்கவழக்கங்களை ஏற்படுத்திக்கொண்டு இறை சிந்தனையுடன் செயற்பட்டீர்களேயானால் நல்லதே நடக்கும்.

ஆக்கம்: **மோ. செந்தூரன்**, உயர்தரம்,
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை




மதுர்பாபு குருதேவர் ஸ்ரீ இராமகிருஷ்ணரை முதற்தடவை சந்தித்ததிலிருந்தே அவரின் ஒழுக்கமான வாழ்க்கை முறையும் இறைவனை அடையவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்திற்காக இறை வழிபாட்டிலேயே மூழ்கிக் கிடந்ததும் குருதேவர் மீது மரியாதையும் ஈர்ப்பும் கொள்ள வைத்தன.

ஆனால் குருதேவர் இராணியை அறைந்தபின்பு அவர் மனதில் ஓர் இயல்பான கேள்வி எழுந்தது. தொடர்ந்து இறை சிந்தனையில் மூழ்கியதால் குருதேவருக்கு மூளைக் கலக்கம் ஏற்பட்டுவிட்டது என்ற முடிவுக்கு வந்தார். இந்நிலையில் இவரால் தொடர்ந்து சம்பிரதாய முறைப்படி பூஜை செய்ய முடியாது என்பதை உணர்ந்தார். மதுர்பாபுவின் மாற்று ஏற்பாட்டின்படி குருதேவரின் சகோதரரான இராமதாரக் சட்டோபாத்யாயர் அர்ச்சகராக அமர்த்தப்பட்டார்.

**மதுர்:** நான் தெளிவாகக் கண்டேன். இந்தத் திசை நோக்கி நடந்து வரும்போது நீங்கள் நடக்கவில்லை... திருக்கோயிலில் உறைகிறாளே. அவளே. அந்த அன்னையே நடந்தாள்! திரும்பி நடக்கும்போதோ அது சாட்சாத் மகாதேவனே!

முதலில் இராமகிருஷ்ணரின் சித்தக் கலக்கத்திற்குச் சிகிச்சை அளிக்க முடிவெடுத்தார். புகழ்பெற்ற மருத்துவர் கங்காபிரசாத் சேன் என்பவரை ஏற்பாடு செய்தார். சிகிச்சை ஏற்பாட்டுடன் மட்டுமன்றி, பக்தியால் தன்வசம் இழக்கின்ற இராமகிருஷ்ணரைத் தர்க்க விவாதங்கள் மூலம் சற்று வழிப்படுத்த அவர் முயன்றார். உதாரணமாக ஒருநாள் மதுர்பாபு, இயற்கை நியதிக்கு இறைவனும் கட்டுப்பட்டவனே என இராமகிருஷ்ணரிடம் தன்னுடைய வாதத் திறமையைக் காட்டினார். ஆனால் குருதேவர், "இறைவன் விரும்பினால் அவனால் அதை மீற முடியும் அல்லது மாற்றியமைக்க முடியும்" என்றார்.

மதுர் அதை ஏற்றுக்கொள்ளாமல், "எங்கே பார்க்கலாம், சிவப்பு மலர்ச் செடியில் சிவப்புப் பூத்தான் பூக்கும். ஒருபோதும் வெள்ளைப் பூ பூக்க முடியாது" என்றார்.

அதற்கு குருதேவர், "இறைவன் விரும்பினால் எதுவும் செய்வான். இதையும் அவனால் செய்ய முடியும்" என்றார். மதுர் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. மறுநாள் காலை குருதேவர் சவுக்குத் தோட்டப்பக்கம் சென்றபோது அங்கே ஒரு அதிசயத்தைக் கண்டார். சிவப்புச் செம்பருத்திச் செடி ஒன்றில் ஒரே கிளையில் சிவப்புப் பூவும் அப்பழுக்கற்ற தூய வெள்ளைப் பூவும் மலர்ந்திருந்தன. வெள்ளை என்றால் அப்படியொரு வெள்ளை. ஒரு சிவப்புப் பொட்டுக்கூட இல்லாத தூய வெள்ளை. இராமகிருஷ்ணர் அந்தக் கிளையை அப்படியே ஒடித்துவந்து மதுரிடம் காட்டி, "இதோ பார், ஒரே கிளையில் இரு வேறு வர்ணப் பூக்கள்" என்றார். அதன் பின்னரே மதுர், "உண்மைதான். நான் தோல்வியடைந்துவிட்டேன்" என ஒப்புக்கொண்டார்.

இவ்வாறான சந்தர்ப்பங்கள் மதுருக்கு குருதேவரிடம் வியப்பையும் மரியாதையையும் ஏற்படுத்தின. ஆனால் சில சமயங்களில் இராமகிருஷ்ணரின் பக்திப் பரவச நிலைகளும் அவரின் செய்கைகளும் சித்தக் கலக்கம் காரணமாகவே அவரிடம் தோன்றியவை என்று அவர்மீது ஐயத்தை ஏற்படுத்தின.

எப்போதும் இறை சிந்தனையில் திளைத்திருக்கும் குருதேவர் ஒரு நாள் தன் அறைக்கு வடகிழக்கே உள்ள நீண்ட தாழ்வாரத்தில் தம்முள் மூழ்கியவராக முன்னும் பின்னும் நடந்துகொண்டிருந்தார். அப்போது மதுர், பஞ்சவடிக்கும் கோவிலுக்கும் இடையே அமைந்துள்ள தன் மாளிகை ஒன்றில் அமர்ந்திருந்தார். அவ் இடத்தில் இருந்தவாறு குருதேவர் உலவு-வதை நன்றாகக் காண முடியும். தமது விடயங்கள் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த மதுர் இடையிடையே இராமகிருஷ்ணரையும் அவதானிக்கலானார். மதுர் தன்னை அவதானிப்பது இராமகிருஷ்ணருக்குத் தெரியாது. ஒருவேளை அவர் சாதாரண மனநிலையில் இருந்திருந்தால்

கூச்சத்துடன் அந்த இடத்தை விட்டு வேறிடம் சென்றிருப்பார்.



அப்போது வினோதமான நிகழ்ச்சி ஒன்று நடந்தது. மதுர் திடீரென்று வேகமாக ஓடி வந்தார். குருதேவரின் திருவடிகளில் வீழ்ந்து அவரது பாதங்களை இறுகப் பற்றிக்கொண்டு அழத் தொடங்கினார். குருதேவர் அவரிடம்,



"என்ன செய்கிறீர்கள்! இராணியின் மருமகனான நீங்கள் இவ்வாறு நடந்துகொள்வதை யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்" என்று கூறினார். படபடப்பு சிறிது தணிந்ததும் மதுர், "நீங்கள் நடக்கும்போது நான் கண்ட காட்சியை என்னென்று கூறுவேன்! ஆம், நான் தெளிவாகக் கண்டேன். இந்தத் திசை நோக்கி நடந்து வரும்போது நீங்கள் நடக்கவில்லை; திருக்கோயிலில் உறைகிறாளே, அவளே, அந்த அன்னையே நடந்தாள்! திரும்பி நடக்கும்போதோ அது சாட்சாத் மகாதேவனே! ஒருவேளை என் கண்களில் ஏதோ கோளாறு என்றுதான் முதலில் எண்ணினேன்.

அதனால் கண்களைக் கசக்கிவிட்டு மறுபடி பார்த்தேன். காட்சியில் மாற்றம் இல்லை. இப்படி ஒருமுறை, இருமுறை அல்ல; பார்க்கும்போதெல்லாம் அவ்வாறே கண்டேன்" என்று கூறிவிட்டு மீண்டும் அழ ஆரம்பித்தார். இராமகிருஷ்ணரோ, "இதையெல்லாம்பற்றி எனக்குத் தெரியாதப்பா!" எனக் கூறிப் பலவிதமாகத் தேற்றினார். இக் காட்சிக்குப் பின், இராமகிருஷ்ணர் சாதாரண மனிதர் இல்லை என்பது தெளிவாகியது. அவர்மீது கொண்ட நம்பிக்கை மதுருக்கு மேலும் திடமானது.

ஆக்கம்: உ. சசிதரன், பழைய மாணவன்
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.

படித்துச் சுவைத்தவை

# தன்னம்பிக்கை ஏன்?



'தன்னம்பிக்கை' என்ற இலட்சியம் நமக்கு மிகப் பெரிய உதவியாக அமையும். இந்தத் தன்னம்பிக்கை எல்லா இடங்களிலும் எங்கும் உபதேசிக்கப்பட்டு, செயல் முறையில் பின்பற்றப்படுமானால் நம்மிடையே உள்ள தீமைகளும் துயரங்களும் பெரும்பாலும் அழிந்துவிடும். மனித வரலாற்றை முழுவதும் பார்க்கும் போது எந்த ஆணோ, பெண்ணோ வரலாற்றில் சிறப்புடன் விளங்கினார்கள் என்றால், அதற்கு மற்ற எல்லாவற்றையும் விட முக்கிய காரணம் அவர்களது தன்னம்பிக்கைதான். பிறந்ததிலிருந்தே, 'நான் சிறப்படையப் போகிறேன்' என்ற எண்ணத்துடன் அவர்கள் வாழ்ந்தார்கள்; சிறந்தவர்கள் ஆனார்கள். எவ்வளவு முடியுமோ அவ்வளவு தாழ்ந்த நிலைக்கு ஒருவன் சென்றாலும், திடீரென ஒரு முரட்டுத் துணிச்சலுடன் மேலேழுந்து, தன்னம்பிக்கையுடன் திகழும் நேரம் ஒன்று வந்தே தீரும்.



எந்த மனிதன் தன்னைத் தானே வெறுக்கத் தொடங்கிவிட்டானோ, அவனுக்கு அழிவின் வாசல் எப்போதோ திறந்துவிட்டது. நமது முதற்கடமை நம்மை நாம் வெறுக்காமல் இருப்பதுதான். ஏனெனின் நாம் முன்னேற வேண்டுமானால் முதலில் நமக்கு நம்மிடம் நம்பிக்கை வேண்டும், பிறகு கடவுளிடம் நம்பிக்கை வேண்டும். தன்னிடம் நம்பிக்கை இல்லாதவன், கடவுளிடமும் ஒருபோதும் நம்பிக்கை வைக்க முடியாது.



எதை நினைக்கிறீர்களோ, அதுவாக ஆவீர்கள். உங்களைப் பலவீனர்கள் என்று நினைத்தால், பலவீனர்கள் ஆவீர்கள், வலிமையானவர்களாக நினைத்தால் வலிமை மிக்கவர்கள் ஆவீர்கள். தூய்மையற்றவர்களாக எண்ணினால் தூய்மையற்றவர்கள் ஆவீர்கள் தூய்மையானவர்களாக எண்ணினால் தூயவர் ஆவீர்கள்.

எனவே நம்மைப் பலவீனர்கள் என்று நினைக்கவேண்டாம். நாம் வலிமை மிக்கவர்கள், எதையும் செய்யும் ஆற்றல் பெற்றவர்கள், என்று நினைத்துச் செயற்பட வேண்டும். எல்லா அறிவும் எல்லா ஆற்றலும் என்னில் இருக்கிறது. அவற்றை வெளிப்படுத்த தன்னம்பிக்கையுடன் செயற்பட வேண்டும். தன்னம்பிக்கையை இழந்துவிடாது முயற்சியுடன் செயற்பட்டால் வெற்றி நிச்சயம்.



எல்லா ஆற்றலும் உங்களிடம் உள்ளது. அதை உணருங்கள், அதை வெளிப்படுத்துங்கள். என்னால் எதுவும் முடியும் என்று சொல்லுங்கள். இல்லை, இல்லை என்று சொன்னால் பாம்பின் நஞ்சுகூட இல்லாமல் போய்விடும்.

உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே. நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல். உன்னுடைய பாதையைப் பின்பற்றித் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு உனது இலட்சியத்தை அடைந்து கொள்.

**சுவாமி விவேகானந்தர்**

மூலம்: **எழுமின் விழிமின்**
ஆக்கம்: **சி. சாம்பவி**, உயர்தரம்,
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

---

இடைவிடாத பயிற்சியும், போராட்டமும் ஒருவரின் உடல் வலிமையைப் பெருக்கும். நம் மன வலிமையும் இதற்கு அப்பாற்பட்டதல்ல. விழுந்தாலும் எழுந்தாலும் ஒடுங்கி விடாது பார்வையை முன்னோக்கிச் செலுத்தி அச்சமற்று முன்னேற வேண்டும். அவ்வப்போது சறுக்கினாலும் கவலைப்படாதே. உறுதியாக முன்னேறிச் செல். **“முயற்சி செய், முயற்சி செய், மறுபடியும் முயற்சி செய்”** என்ற பொன்னான அறிவுரையை மறந்துவிடாதே.



**-சுவாமி இராமகிருஷ்ணானந்தர்-**

# சாதனையாளர்

இன்றைய உலகில் பெண்களுக்குத் தைரியமும் தன்னம்பிக்கையுமே சிறந்த கவசங்களாகும். தமது வாழ்க்கையைப் பிறருக்காக அர்ப்பணிக்க முன்வரும் பெண்கள் அரிது. எனினும் அவ்வாறு முன்வரும் பெண்கள், மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பெருமையடைகின்றனர். அவ்வாறான ஒரு சாதனைப் பெண்ணே நாம் பார்க்கவிருக்கும் மலாலா யூசப்சாயி (Malala Yousufzai).

மலாலா, பாகிஸ்தான் நாட்டின் வடமேற்கு எல்லைப்புற மாகணத்தில் உள்ள 'மிங்கோரா' எனும் சிற்றூரில் 1997ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12ஆம் திகதி பிறந்தாள். சிறுவயதிலிருந்தே ஊடகங்களில் பிரசித்திபெற்றவளாக இருந்தாள். 2009ஆம் ஆண்டில் BBC யின் உருது வலைப்பதிவு ஊடாக, தானும் தனது ஊரும் தலிபான் போராளிகளால் எவ்வாறு கட்டுப்படுத்தப்பட்டுள்ளனர் என விவரித்துவந்தாள்.



ஐக்கிய நாடுகள் சபையானது மலாலாவின் பிறந்த தினமான ஜீலை 12ஐ "மலாலா தினம்" ஆகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

தனது பெயரில் அல்லாமல் புனைபெயர் ஒன்றில் எழுதிவந்தமையால் அவளது அடையாளம் தெரியாதிருந்தது. ஆனால் துரதிஷ்டவசமாகத் தொலைக்காட்சி நேர்முகமொன்றில் நேரடியாக அவள் தோன்றியதால் தலிபான்களின் இலக்குக்கு ஆளானாள். ஆகவே 2012 ஒக்டோபர் 9 அன்று பள்ளி செல்லும் பேரூந்தில் வைத்து, தலிபான் ஒருவனால் சுடப்பட்டாள்.





எனினும் இறைவனின் அருளால் அவள் பிழைத்தாள். இந்த நிகழ்ச்சியால் மலாலா, அதற்கான முயற்சிகளில் தீவிரமாக இறங்கினாள். இதனால் உலக நாடுகளின் அன்பைச் சம்பாதித்துக்கொண்டாள். மலாலாவுக்கு பாகிஸ்தானின் முதல் அமைதிப்பரிசு, உலக அமைதி மற்றும் செழிப்பு அறக்கட்டளையின் தைரியத்திற்கான விருது, 2014ஆம் ஆண்டிற்கான அமைதிக்கான நோபல்பரிசு ஆகிய விருதுகள் வழங்கப்பட்டன.



மலாலா, உலகில் மிகச் சிறு வயதில் நோபல் பரிசுபெற்றவர் என்ற பெருமையையும் பெற்றாள். மேலும் அவளைக் கௌரவிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையானது மலாலாவின் பிறந்த தினமான ஜூலை 12ஐ 'மலாலா தினம்' ஆகப் பிரகடனப்படுத்தியுள்ளனர். தற்போது இலண்டனில் வசிக்கும் மலாலா, பெண்கள் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்துவருகிறாள்.



மலாலாவைப் போன்று பெண்கள் அனைவரும் சமூகசேவையில் அக்கறைகொண்டு அவற்றில் ஈடுபடவேண்டும். 'உலகின் முன்னேற்றதுக்கு முதலில் பெண்கள் முன்னேற்றமே அவசியம். அவ்வாறு இல்லையென்றால் அது பறவையொன்று ஒரு இறக்கையை வைத்துக்கொண்டு பறக்க முயற்சிப்பது போன்றதாகும்' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

ஆகவே நாமும் நம்மால் இயன்ற சேவையைச் சமூகத்திற்கு வழங்கி 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்பதற்கமைய வாழ்வோமாக.

ஆக்கம்: மோ. செந்தூரன், உயர்தரம்,
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

# செய்திகள்



அறநெறி அமுதத்தின் 16ஆவது அமுதத்தின் 3ஆவது துளி 24-07-2016 அன்று வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலய அதிபர் செல்வி சாந்தினி வேலுப்பிள்ளை அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

---

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் நேரடிச் சீடர்களான சுவாமி நிரஞ்ஜனானந்தர், சுவாமி அத்வைதானந்தர், சுவாமி அபேதானந்தர், மற்றும் சுவாமி அகண்டானந்தர் ஆகியோரது ஜெயந்தி தினங்கள் முறையே ஜூலை 31, ஆகஸ்ட் 13, செப்டெம்பர் 24, 30 ஆம் திகதிகளில் ஆசிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

---



இந்துக்களின் புனித நூலாம் பகவத்கீதையை அருளிய, ஸ்ரீ கிருஷ்ண பிரானின் ஜெயந்தி தினம் ஆகஸ்ட் 25-08-2016 அன்று எமது இராமகிருஷ்ண மிஷன் ஆசிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. 25-09-2016 அன்று கிருஷ்ண ஜெயந்தி தினமும், ஞாயிறு சமய பாடசாலையின் 64ஆவது ஆண்டு விழாவும் பஜனை, பேச்சு, நடனம், நாடகம், வில்லிசை, யோகாசனம் போன்ற பல கலை நிகழ்ச்சிகளுடன் மாணவர்களால் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்றைய நிகழ்விற்கு இந்தியாவில் இருந்து வருகைதந்த சுவாமி தர்மிஷ்டானந்தஜி மஹராஜ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்ததோடு, மாணவர்களின் கையெழுத்துச் சஞ்சிகையான “விவேகவாஹினி”யையும் வெளியிட்டு வைத்தார்.



---

விநாயகப் பெருமானின் விசேட தினமாகிய ஆவணிச் சதுர்த்தி 05-09-2016 அன்று எமது ஆசிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. 11-09-2016 அன்று ஞாயிறு பாடசாலை மாணவர்களால் பஜனை, உரையாடல், நடனம், நாடகம் போன்ற கலைநிகழ்ச்சிகளுடன் ஆவணிச் சதுர்த்தி தினம் கொண்டாடப்பட்டது.



துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய முப்பெருந்தேவியரின் அருள் வேண்டி நவராத்திரி தினமானது ஒக்டோபர் 1ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை ஆசிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. தினமும் தேவி மஹாத்மிய பாராயணம் இடம் பெற்றதுடன் மகா அஷ்டமி அன்று சிறப்பு ஹோமமும் இடம் பெற்றது. இறுதி நாளான 11-09-2016 விஜயதசமி அன்று ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தஜி மஹராஜ் அவர்களால் பல சிறுவர்களுக்கு வித்தியாரம்பம் செய்து வைக்கப்பட்டது. 16-10-2016 அன்று ஞாயிறு சமய பாடசாலை மாணவர்களால் கலைநிகழ்வுகளுடன் நவராத்திரி விழா இனிதே கொண்டாடப்பட்டது.



---

## ஆன்மீகச் சொற்பொழிவுகள்



1. சிங்கப்பூரிலிருந்து வருகை தந்திருந்த ஸ்ரீமத் சுவாமி விமோக்ஷானந்தஜி மஹராஜ் (தலைவர், இராமகிருஷ்ண மிஷன், சிங்கப்பூர்) அவர்களால் விநாயக விளக்கம், பக்தர்களின் ஸ்ரீ இராமகிருஷ்ணர் மற்றும் அன்னையின் அருள் ஆகிய தலைப்புகளில் ஆசிரம மண்டபத்தில் உரை நிகழ்த்தினார். அத்தினங்களில் பல பக்தர்கள் கலந்து கொண்டு அவ் உரைகளைக் கேட்டுப் பயன் பெற்றனர்.



2. ஸ்ரீமத் சுவாமி விமோக்ஷானந்தஜி மஹராஜ் அவர்கள் எமது ஞாயிறு பாடசாலை மாணவர்களுடன் 18-09-2016 அன்று உரையாடியமையும் மாணவர்களுக்கு நல்ல பல கருத்துக்களை ஊட்டியமையும் குறிப்பிடத்தக்கது.

# படம் தரும் பாடம்

*-வாசகர் கருத்து...*

கடந்த இதழில் 'படம் தரும் பாடம்' எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட படத்திற்கு எமது இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலையைச் சேர்ந்த மாணவன் சி. விஷ்வாகரன் (தரம் 10) எழுதிய கருத்து...

சுயநலத்துடன் வாழும் இன்றைய சமூகத்தில் பொது நலத்துடன் கூடிய மனிதர்களைக் காண்பது மிக அரிது.



பொதுநலம் என்பது சக மனிதர்களின் நலம் மட்டுமல்ல, பிற ஜீவராசிகளையும் தன்னுயிர் போல எண்ணி அக்கறை காட்டுவதேயாகும். இதற்கு நம் மனிதில் இருக்க வேண்டியது தூய அன்பேயாகும். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக, தாயுமான சுவாமிகளின் இக்கூற்று விளங்குகின்றது:

***"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"***

இக் கூற்றை மெய்ப்பிக்கும்படியாக இப் படத்திலுள்ள சிறுவன், தன்னைப் போல ஒரு உயிர் வாய்க்காலில் விழுந்து அவதிப்படுவதைக் கண்டு, ஆபத்தான அந்த வாய்க்கால் விளிம்பில் நண்பனின் உதவியுடன் இறங்கி அப் பூனையைக் காப்பாற்றுகிறான். இங்கு ஒரு உயிர் ஆபத்திலிருப்பதைக் கண்டதும் அவனது மனதிலிருக்கும் அன்பு வெளிக் கொணரப்படுகிறது.

இதை:

***"அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அது ஈனும்***
***நண்பென்னும் நாடாச் சிறப்பு"***

எனும் குறள் விளக்குகின்றது.

# உங்கள் சிந்தனைக்கு...



தோமஸ் அல்வா எடிசனை அவரது பள்ளி ஆசிரியர், 'எதற்கும் தகுதியற்றவர்' என்று கூறிவிட்டார். வைத்தியர்கள் எடிசனை சோதனை செய்து பார்த்துவிட்டு, "எடிசனின் தலை அமைப்பு இயற்கைக்கு விரோதமாக அமைந்திருக்கிறது. எனவே, இவர் விரைவில் பைத்தியம் ஆகிவிடுவார்!" என்று கூறினார்கள்.

ஆனால் எடிசனின் தாயாரோ, "எடிசனைப் பெரிய ஆளாக்குவேன்!" என்னும் உறுதியோடு அவருக்குப் பாடம் கற்பித்தாள். அந்தத் தாயாரின் விடாமுயற்சியாலும், உழைப்பாலும் எடிசன் உயர்வுபெற்றார். "மனிதன் கடன்பட்டிருப்பது மூளைக்கல்ல! முயற்சிக்கே! கடவுள் வரங்களை விற்பனை செய்கிறார். மனிதர்களின் முயற்சியே அவற்றின் விலை!" என்னும் அற்புத உண்மையை எடிசன் பிற்காலத்தில் அறிவித்தார். அவர் கூறியவாறே அவர் வாழ்க்கையும் அமைந்து வெற்றி கண்டது.

ஒருசமயம் எடிசன், "என் வயதை, நான் செய்து முடித்து வெற்றி கண்ட செயல்களைக் கொண்டே கணக்கிடுகிறேன். வயதின் முதிர்ச்சியால் நான் ஓய்ந்து சும்மா இருக்கும் காலத்தை எதிர்பார்க்கவில்லை. வேலை நிறைந்த வாழ்க்கையே நல்வாழ்க்கை என்று நான் நினைக்கிறேன்!" எனக் கூறினார்.

அன்பளிப்பு ரூ. 10.00